மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே இங்கே பேசுகின்றபோது சான்றிதழ்தான் பொய் என்று சொன்னேன். உறுப்பினர்கள் பேசுகின்றபோது பொய் சொல்லப்பட்டது என்ற வகையிலேதான் பேசக்கூடாது. ஆகவே பொய் என்ற வார்த்தையே அன்பார்லிமெண்டரி என்று சொல்வதற்கில்லை.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உரிமைக் குழு.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, உறுப்பினர் திரு அ. ரகுமான்கான் அவர்கள் மீதுள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழு.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்களுடன் தொடர்பான பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1973–74) இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மேற்படிகுழுவின் பத்தாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் வணிகத்துறைகள் மீதான அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த